**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP - 23/2020**

**நாள் – 06.02.2025**

**PW – 2** மகேஷ்குமார்

**த/பெ.** ராமசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of February 2025)**

**குறுக்கு விசாரணை**

1. மனுதாரர் எனக்கு சொந்தம் என்றால் இல்லை, எனக்கு பழக்கமானவர். நாங்கள் இருவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். நான் அவிநாசி சின்னேரிபாளையத்தில் கடந்த 5 வருட காலமாக விவசாய வேலை செய்து வருகிறேன். நான் 2 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறேன். அந்த விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு ஞானமூர்த்தி மற்றும் ஆனந்த் என்ற இரண்டு மகன்கள். அவர்களுக்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். அதில் அவர்கள் விவசாயம் செய்வதில்லை, அந்த நிலத்தை அவர்கள் குத்தகைக்கு கொடுத்துள்ளார்கள். அவர்கள் மாத குத்தகைக்கு விட்டுள்ளார்களா அல்லது வருட குத்தகைக்கு விட்டுள்ளார்களா என்று எனக்குத் தெரியாது. மனுதாரரின் இளைய மகன் ஆனந்த் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் அது எனக்குத் தெரியாது. மனுதாரர் வள்ளியம்மாளை தற்போது யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் வள்ளியம்மாள் மட்டும் தனியாக வசித்து வருகிறார். அவருக்கு குத்தகை வருமானம் மட்டும் தான் வருகிறது.

2. மனுதாரரை அவரது இளைய மகன் ஆனந்த் நல்ல முறையில் தான் பராமரித்து வருகிறார் என்றும் இருந்தும், நான் இந்த வழக்கிற்காக வேண்டி மனுதாரர் தனியாக வசித்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போனவர் எனக்கு நேரடியாக யார் என்று தெரியாது என்றும், மனுதாரர் சொல்லி தான் அவரை தெரியும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் இறந்து போனவர் என்ன தொழில் செய்து வந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அவர் மில்லுக்கு வேலைக்கு சென்று வந்தார். இந்த விபத்து சம்பந்தமாக நான் தகவல் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. நான் இந்த விபத்து பற்றி எந்த விபரமும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.02.06 18:34:09 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**